DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE)
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | |
|---|---|
| Name | பழனி |
| Father's Name | சீனிவாசன் |
| Village | பெரியபேட்டை |
| Taluk | வாணியம்பாடி |
| Calling | அரிசி மில் வியாபாரம் |
| Age | 63 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of **29.07.2025**

**O.S. No. 98/2019 பி.வா.சா.1**

**<u>2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

1. நானும் 2ம் பிரதிவாதியும் சேர்ந்து வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்து வருகிறோம் என்று வாதி கூறியிருப்பது சரியா என்றால் சரியல்ல. வாதி மற்றும் 2ம் பிரதிவாதிக்கிடையே ஏற்படுத்தப்பட்ட ஆவணம் கிரைய ஆவணமா அல்லது அடமானமா என்றால் கிரைய ஆவணம் ஆகும். வாதி அது கிரைய ஆவணம் இல்லை என்றும் அது அடமானம் தான் என்றும் அதற்கு அவர் வட்டி செலுத்தி வந்ததாகவும், அதற்கு ரசீது தரமாட்டார்கள் என்று கூறியிருக்கிறார் என்றால் சரியல்ல, ரசீது எதுவும் வழங்கப்படவில்லை.

2. பொதுவாக ஒரு கிரையம் என்றால் வட்டி செலுத்த தேவையில்லை அதனால் ரசீது எதுவும் வழங்கப்படதேவையில்லை என்றால் சரிதான். வாதி ஒரு முறையாவது காசோலையாகவோ பணபரிமாற்றமாகவோ பணம்

செலுத்தினாரா என்றால் இல்லை. எனவே வாதி வட்டி செலுத்தினேன் என்று கூறுவது பொய் என்றால் சரிதான்.

3. இந்த கிரைய ஆவணம் ஏற்படுத்தும்போது வாதி பூர்த்தி செய்யப்படாத 2 காசோலை(SBI, Vaniyambadi), 2 கடனுறுதி சீட்டு மற்றும் இரண்டு முத்திரைத்தாள் கொடுத்திருக்கிறார் என்று சொல்லியிருக்கிறார் என்றால் அது தவறு. வாதி உண்மையிலேயே அவ்வாறு கொடுத்திருந்தால் வங்கியிலோ அல்லது போலிசாரிடமோ புகார் அளித்து அந்த புகார் ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்திருப்பார் என்றால் சரிதான்.

4. நான் என்னுடைய எதிர்வழக்குரையில் இந்த வழக்கை தள்ளபடி செய்ய வேண்டும் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு எதிராக வாதி இவ்வழக்கில் குறிப்பிட்டு எந்த பரிகாரமும் கோரவில்லை என்பதால் இவ்வழக்கு எனக்கு எதிராக தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று கூறியிருந்தேன் என்றால் சரிதான்.

5. இவ்வழக்கு சம்மந்தமான சொத்து பரிமாற்றம் குறித்து எனது பங்கு என்னவென்றால் நான் அந்த ஆவணத்தில் முதலாவது சாட்சி கையொப்பம் செய்த நபர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் விற்ற வாதிக்கும் வாங்கிய 2ம் பிரதிவாதிக்கும் இடையே தரகராக செயல்பட்டதாக கூறியிருக்கிறேன் என்றால் சரிதான், நட்பின் அடிப்படையில் செய்து கொடுத்தேன். மேற்படி தரகராக செயல்பட்டதற்கு பிரதிபலன் ஏதேனும் பெற்றேனா என்றால் இல்லை.

6. மேற்படி பரிமாற்றத்தின் கிரையதொகை எவ்வளவு என்று தெரியுமா என்றால் தெரியும் ரூ.65,000/-. மேற்படி தொகை எத்தனை மதிப்பு பண தாள்கள் எவ்வளவு தாள்கள் மற்றும் யாரிடம் கொடுக்கப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியும், ஆயிரம் ரூபாய் மதிப்புக்கொண்ட 65 பணத்தாள்கள் கொடுக்கப்பட்டது. நான் கூறுவது பொய் என்றாலும் பண மதிப்பிழப்பு மத்திய அரசால் செய்யப்பட்ட பிறகு அப்படி பரிமாற்றம் எதுவும் நடைப்பெற்றிருக்காது என்றால் சரியல்ல, பண மதிப்பிழப்பு செய்யப்படுவதற்கு முன்பாகவே பரிவர்த்தனை நடைப்பெற்றுவிட்டது.

7. மேற்படி பணம் தொகையான ரூ.65,000/-யை எங்கு வைத்து கிரையம் பெற்றவர் கிரையம் கொடுப்பவரிடம் கொடுக்கப்பட்டது என்றால் ஆவண எழுத்தர் கல்பனா என்பவரின் அலுவலகத்தில் வைத்து கொடுக்கப்பட்டது. மேற்படி ஆவணம் கல்பனா என்பவர் எழுதியது தான் என்றால் சரிதான். கிரையம் கொடுத்தவர், கிரையம் பெறுபவர் என இருவரையும் இன்னார் என்று நிரூப்பித்தவர் என்றும் நான் தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி இன்னார் என்று நிரூபிக்கும் நடவடிக்கை எங்கு நடைப்பெற்றது என்றால் சார்பதிவாளர் அலுவலகத்தில் அவர் முன்னிலையில் நடைப்பெற்றது.

8. சார்பதிவாளர் அப்போது கிரையத்தொகையை பெற்றுக்கொண்டீரா என்று வாதியிடம் கேட்டாரா என்றால் கேட்டார். மேற்படி கேள்வி கேட்டபோது வாதி என்ன பதில் கூறினார் என்றால் கிரைய தொகையை பெற்றுக்கொண்டேன் என்று பதிலளித்தார். மேற்படி நடவடிக்கைக்கு பின் என்ன நடைபெற்றது என்றால் வாதி மற்றும் இரண்டாம் பிரதிவாதி நிலத்திற்கு

சென்று மண்ணை ஒரு பிடி எடுத்து சுவாதீனம் கொடுக்கப்பட்டது, அப்போது நான் உடன் இருந்தேன். மேற்படி நிகழ்வானது எப்போது நடைபெற்றது என்றால் கிரயம் பதிவு செய்த அன்று மாலை சுமார் 5 மணியளவில் நடைபெற்றது.

| | |
|---|---|
| ***ESHWAR VISWANATHAN*** | *DISTRICT MUNSIF* <br> *Digitally signed by ESHWAR VISWANATHAN* |

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**வாணியம்பாடி.**